சென்னை–6, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திருமதி உ. உமாதேவி, பி.ஏ.பி.எல்., எச்.டி.சி.எம்.,
சுருக்கம்

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்குத் தேர்வு 2018-2019 மற்றும் 2019-2020ஆம் ஆண்டிற்கான காலத்திற்கு தேர்வு செய்யப்பட்டு, தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – சென்னை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

---

அ / 1651 / 2021

நாள்: 30.06.2021
(பிலவ வருடம், ஆனி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2052)
படிக்கப்பட்டது:

1 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண். 2387/PSD–I/2020, நாள் 28.05.2020.

2 சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண். ஜி3/16386/2020 -1, நாள் 29.07.2020.

* * * * *

ஆணை:

சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2018-2019 மற்றும் 2019-2020ஆம் ஆண்டிற்கான காலத்திற்கு, இளநிலை உதவியாளர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டு, மேலே 1–ல் படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக, தொழிலாளர் துறைக்கு, ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு. சே. பிரேம்குமார் என்பவர், மேலே 2–ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணைகளின்படி, சென்னை, கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு, 05.08.2020 அன்று முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.

அன்னாரது தெரிவு உறுதி செய்யப்படுவதாக, மேலே 1-ல் படிக்கப்பட்ட தேர்வாணைய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அன்னாரின் பணியினை, கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்ய பார்வை 2-ல் காணும் செயல்முறை ஆணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Service Examination – IV for the year **2018-2019 and 2019-2020."**

சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில், 2018-2019 மற்றும் 2019-2020ம் ஆண்டில், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுகள் – IVல் அடங்கிய தெரிவுகளுக்கெதிராக, நிலுவையிலுள்ள ரிட் மனுக்களின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டு தனியருக்கு கீழ்கண்டவாறு பணிவரன்முறை செய்யப்படுகிறது.

| பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| திரு. சே. பிரேம்குமார்,<br>இளநிலை உதவியாளர்,<br>கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,<br>சென்னை -6. | 05.08.2020<br>முற்பகல் | 05.08.2020<br>முற்பகல் |

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28 மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொது விதி 32–ன் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில், தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணியில், இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது.

தனியர் மேற்படி தகுதிகாண் பருவ காலத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு மற்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

2.2021 30/6/21

கூடுதல் தொழிலாளர் ஆணையர்,
சென்னை -6.

30/6/21

பெறுநர்
திரு. சே. பிரேம்குமார்,
இளநிலை உதவியாளர்,
கூடுதல் தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,
சென்னை -6.

நகல்
1. இருப்புக்கோப்பு.
2. பணிப்பதிவேடு / உதிரி.

<u>நகல் பணிந்தனுப்பப்படுகிறது</u>
தொழிலாளர் ஆணையர், சென்னை -6.